## தலைவர் கலைஞரிடம் கற்றுக்கொண்ட பாடம்



‘இவ்வளவு நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கிறீர்களே, சற்று ஓய்வெடுக்கலாமே’ என்று கழகத் தலைமை நிர்வாகிகளும், விருப்பமனு அளித்தவர்களும் தெரிவித்தார்கள். ஓய்வைவிட உழைப்புதான் உற்சாகத்துடன் தொடர்ந்து இயங்கச் செய்கிறது.

உடன்பிறப்புகளின் முகம் பார்த்தே அவர்களின் மன ஓட்டத்தை அறியும் உணர்வை நம் உயிர்நிகர் தலைவர் கற்றுத் தந்திருக்கிறார். நேர்காணலுக்காக அறிவாலயத்திற்கு வந்த உடன்பிறப்புகளைப் பார்த்தபோது, அவர்களுடைய தொகுதிகளைச் சார்ந்த, அறிவாலயம் பக்கமே வந்திராத கழகத்தின் ஆணிவேரான தொண்டர்களின் முகங்களும் என் மனதில் தோன்றின. தலைவர் முதல் தொண்டர் வரை அத்தனை பேரிடமும் ஒரே உணர்வு கொண்ட இயக்கம்தானே நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

– முதல்வர் மு.க.ஸ்டாலின்

## உடன்பிறப்புகளுடன் உற்சாகத்துடன் நேர்காணல்



மார்ச் 17 தொடங்கி, முதல்நாள் புதுச்சேரி, இரண்டாவது நாள் தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களைச் சேர்ந்த 2,000 உடன்பிறப்புகளையும் 9 மணி நேரத்திற்கும் மேலாகச் சந்தித்து நேர்காணலை நடத்தினேன்.

அறிவாலயத்தில் திரண்டிருந்த உடன்பிறப்புகளின் ஆர்வமும், அவர்களிடம் காணப்பட்ட எழுச்சியும் என் களைப்பை விரட்டி, உற்சாகத்தை அளித்தது.

மூன்றாவது நாள், மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகளிடம் 52 தொகுதிகளுக்கான நேர்காணலை நடத்தி முடித்தேன்.

– முதல்வர் மு.க.ஸ்டாலின்



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக தலைமை நிலைய அலுவலக செயலாளர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, ரம்ஜான் பண்டிகையையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# தனி மனித வாழ்வைச் செம்மைப்படுத்தும் ரமலான் நோன்பு!

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் வாழ்த்து!

*திருச்சி, மார்ச் 22-*

தனி மனித வாழ்வை செம்மைப்படுத்தும் ரமலான் நோன்பு என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்து தெரிவித்தார்.

இது குறித்து அவரது வாழ்த்து செய்தி வருமாறு:

ரமலான் நோன்புப் பெருநாள் வாழ்த்துகள் அனைவருக்கும் உரித்தாகும்.



இஸ்லாமிய மார்க்கக் கடமையில் ஒன்றான நோன்பு, தனிமனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதோடு, நோன்பு மாதத்தில் ஏழைகளுக்குப் பங்கிட்டு அளிக்கும் கொடைகள் மூலம் சமுதாயத்தில் ஏழ்மை நீங்கி, அனைவரும் வளமோடு வாழ்வதற்கான வழியையும் திறந்து விடுகிறது என்பதைப் பார்க்கிறோம்.

முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நாடும் ஏடும் நானிலமும் போற்றும் திராவிட மாடல் நல்லாட்சியில் அனைத்து சமுதாய மக்களும் நோன்பை மதித்துப் போற்றி வருவதைப் பார்க்கும்போது, எல்லாரையும் மனதால் இணைக்கும் இந்தத் திராவிட மாடல் நல்லாட்சி எங்கணும் பரவ வேண்டும் என்று பிரார்த்திக்கக் கடமைப்பட்டவர்களாகி விடுகிறோம்.

‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’, ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’, ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ (உறவினர்) ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்’ என்னும் உன்னதக் கொள்கைகளை நிலைநிறுத்தும் ரமலான் நோன்புத் திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துகள். எல்லாமும் எல்லாரும் பெற்று இனிதாக வாழ்ந்திட வாழ்த்துவோம்.

இவ்வாறு அவர் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

# தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்குப் போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் செலுத்தியவர்களை கழகத் தலைவர் அவர்கள் 17–03–2026 முதல் 23–03–2026ஆம் தேதி வரை, பின்வரும் மாவட்ட வாரியாக சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாகச் சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்கள்.

குறிப்பிட்டுள்ள தேதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் மட்டும் வரவேண்டும். மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள் வரவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்கள் தங்களுக்கான ஆதரவாளர்களையோ, பரிந்துரை யாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையும் ‘அவர்களுக்காக விருப்ப மனு’ செலுத்தியோரையும் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மாவட்ட வாரியாக நேர்காணல் நடைபெறும் நாள் விவரம்

| நாள் – கிழமை | நேரம் | மாவட்டம் |
|---|---|---|
| மார்ச் 22 ஞாயிறு | காலை 9.00 மணி | கடலூர் கிழக்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, காஞ்சிபுரம் தெற்கு. |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு |
| மார்ச் 23 திங்கள் | காலை 9.00 மணி | திருச்சி வடக்கு, திருச்சி மத்திய,திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, பெரம்பலூர், அரியலூர் |
| மார்ச் 23 திங்கள் | மாலை 4.00 மணி | புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை நாகப்பட்டினம், திருவாரூர் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### பட்டுக்கோட்டை அழகிரி 77–ஆம் ஆண்டு நினைவு நாள் மார்ச் 28

# உலகின் பல நாடுகளிலும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, மார்ச் 22-*

சுயமரியாதை இயக்கத்தின் ஆணிவேரான அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரியின் 77 ஆம் ஆண்டு நினைவு நாளான வரும் மார்ச் 28 அன்று வேரை நினைத்து உறுதியைப் புதுப்பிக்கும் நாளாக நடத்திடுவோம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

அறிவாசான் தந்தை பெரியாரால் 1925 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற, சுயமரியாதை இயக்கம் (The Self Respect Movement) அதன் நூற்றாண்டு நிறைவு உலகெல்லாம் பற்பல நாடுகளிலும் கொள்கைத் திருவிழாக்களாக சில ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி, நூறா ண்டு நிறைவிற்குப் பின்னரும், அக்கொள்கை பரப்பு விழாக்கள் தொடர்கின்றன!

### உலகின் பல நாடுகளிலும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா!

அமெரிக்காவின் “பெரியார் பன்னாட்டு அமைப்பு”மூலம், நான்கு மாநாடுகள், மூன்று கண்டங்களில் நடந்தேறி, பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஓர் உலக மானிட அறிவு விடுதலை இயக்கம் என்று காட்டி, உலகப் பந்தில் உலா வரச் செய்துவருவது பாராட்டி வரவேற்கத்தக்கது.

தமிழ்நாட்டைத் தாண்டி, ஜோதிபாபூலே, சாவித்திரி பாய் பூலே, சத்திரபதி சாகு மகராஜ், அண்ணல் அம்பேத்கர் மண்ணான மராட்டியத்தில், சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மும்பையில் இரண்டு நாள்கள், மூன்று மொழிகளில் (மராட்டியம், ஆங்கிலம், தமிழ்) வெற்றிகரமாக நடத்தின மராட்டிய மாநில திராவிடர் கழகமும், பகுத்தறிவாளர் கழகமும்! (3, 4.1.2026)

அதுபோல, கடந்த பிப்ரவரி 28 இல், கருநாடக மாநில திராவிடர் கழகத்தின் ஏற்பாட்டில், சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா - மாநாடு - கருத்தரங்கம் முதலியன கன்னடம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளில் சிறப்பாக நடைபெற்று வாகை சூடியது! (28.2.2026)

### புதுடில்லியிலும் நடந்தேறியது!

அதன் தொடர்ச்சியாக, நாட்டின் தலைநகரமான புதுடில்லியில், சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவையொட்டி கருத்தரங்க விழாக்கள் - 19, 20 மார்ச் 2026 தேதிகளில் நடைபெற்றது. பெரியார் - மணியம்மை தொழில் நுட்ப இன்ஸ்டிடியூட் என்ற நிகர்நிலை பல்கலைக் கழகமும் - டில்லி டான்பாஸ்கோ இன்ஸ்டிடியூட்டும் இணைந்த - பேராசிரியர்கள், நாடாளுமன்ற, உறுப்பினர்கள், சட்ட அறிஞர்கள், வழக்குரைஞர்கள், டாக்டர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி னார்.

(காணொலி மூலம், நான் தலைமை அழைப்பாளராக கலந்துகொண்டேன்).

இன்னமும் தொடர்ந்து பற்பல பகுதிகளிலும், சுயமரியாதை இயக்கக் கொள்கை முழக்கங்களும், திட்டங்களும், மாநில, ஒன்றிய அரசுகளால் ஏற்று சட்ட வடிவங்களும் பெற்றிருக்கின்றன.

### சுயமரியாதை இயக்கத்தின் ஆணிவேர் அஞ்சாநெஞ்சன் அழகிரி!

இவ்வளவு வளர்ச்சியைப் பெற - அசைக்க முடியாத ஆலமரமாக - பழுதில்லா விழுதுகள் - திராவிட ஆட்சி - மக்கள் மாட்சி போன்றவையே அடித்தளமாக அமைந்தன. தந்தை பெரியார் ஒரு தனி மனிதரல்ல - நிறுவனம் - ஒரு திருப்பம் - காலகட்டம் - சகாப்தம் என்று சரியாகக் கணித்த பேரறிஞர் அண்ணா போன்றவர்களுக்கு முன்பே, தந்தை பெரியாருடன் அடிநாள் தொட்டே இணைந்து, எதிர்நீச்சல் அடித்து, பிரச்சாரப் பெருமுழக்கம் செய்து, கல்லடி, சொல்லடிகளைத் தாங்கி உழைத்தவர்களில் - வேர்களில் முதன்மையும், முக்கியமும் பெற்றவர் அஞ்சாநெஞ்சன் தளபதி பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்கள் ஆவார்கள்!

வறுமையில் வதிந்த நேரத்திலும், வளமையாக வாழ்வதற்குத் தன்னை விற்றுக் கொள்ளாத உயரிய கொள்கைச் சிங்கம் அவர்!

‘எனது ஒரே தலைவர் - வழிகாட்டி - ஆசான் தந்தை பெரியாரே’ என்று தனது இறுதி மூச்சு அடங்கும்வரை தளரா உறுதி - தணியா தலைமையின் கட்டுப்பாட்டை மதித்து, கருப்பு மெழுகுவத்திகளின் முன்னோடியான “அண்ணன் அழகிரி” என்ற அடுத்த தலைமுறையினர் அன்போடு அழைத்த - அந்த அஞ்சா நெஞ்சனின் 126 ஆவது ஆண்டு பிறந்த நாள் வருகிற ஜூன் மாதம் 6 ஆம் தேதி (அவரது பிறப்பு 20.6.1900).

வாலிபத்தை வசந்தத்தில் வைத்த நேரத்தைவிட, ஆரியத்தோடுப் போராடிய காலம் அதிகம்! அந்த எடுத்துக்காட்டான சுயமரியா தைப் போர்ச் சங்கு, வாழ்வின் இறுதி நாள்களில், ‘காச நோய்’ என்ற நோயோடு போராடியது.

ஈரோட்டில், 1948 இல் (23, 24.10.1948) தந்தை பெரியார் கூட்டிய திராவிடர் கழக தனி மாநாட்டில், அறிஞர் அண்ணாவைத் தலைவராக அம் மாநாட்டிற்கு அமைத்ததோடு, அண்ணாவை சாரட்டில் அமர வைத்து, முன்னால் தந்தை பெரியார் நடந்தே வந்து, ‘தலைவன் என்போன் தொண்டர் நாதன்’ என்று உலகுக்கு உணர்த்தினார்.

“இறுதி மரியாதை செலுத்த வந்துள்ளேன்” என்று அண்ணன் அழகிரி மிகவும் உருக்கமாக, நா தழு தழுக்க, கண்ணீர் மல்கப் பேசிய பேச்சு, மாநாட்டில் கூடிய ஆயிரக்கணக்கானோர் கண்களிலும் தாரை தாரையாகக் கண்ணீர் பீறிட்டது. அழுத பல்லாயிரம் தோழர்களில், இந்த 15 வயது இளைஞனும் ஒருவன்!

### திருவண்ணாமலையில் அய்யா பற்றி அழகிரி ஆற்றிய வீரனின் கர்ச்சனை!

13.12.1947 அன்று, திருவண்ணாமலையில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில், தந்தை பெரியார் படத்தைத் திறந்து வைத்து - அஞ்சா நெஞ்சன் அண்ணன் அழகிரி ஆற்றிய பேருரை, ஒரு சுயமரியாதை இயக்கச் செப்பேடு, சிலாசாசனம் - ‘இதோ பெரியாரில் பெரியார்!’ - உலகுக்குப் பெரியார் என்ற பேரொளியை படம் பிடித்துக் காட்டிய திராவிடர் இயக்கப் பாட நூலாகும்.

அந்த கொள்கைச் சிங்கத்தின் சுயமரியாதை இயக்க மூல வேர்களில் ஒருவரான அஞ்சாநெஞ்சன் பிறந்த நாளை, திராவிட இயக்கம் கொள்கை பரப்பு விழாவாக எங்கெங்கும் கொண்டாடுவோம்!

அவர் மறைந்தது 1949, மார்ச் 28 ஆம் தேதி - ஒரு வார இடைவெளி!

திராவிட இயக்கத் தலைவர்களில் சிலர் 60 வயதை யே தாண்டாத ஒரு கெடு வாய்ப்பு என்பது வேதனையான காலக்கொடுமை!

தளபதி அழகிரி அவர்களின் 77 ஆம் ஆண்டு நினைவு நாள் - தமிழ்நாட்டில் தேர்தல் பரப்புரை இருக்கும் நிலையிலும், திராவிடர் கழகம், வேரை நினைத்து உறுதியைப் புதுப்பிக்கும் நாளாக - மக்களிடையே பரப்புரை நடத்திட, நாடெங்கும் பரவலாக ஏற்பாடுகள் -தலைமைக் கழக வழிகாட்டல்படி நடத்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையை ஏற்று சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் கல்பகனூர் ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர் 20க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி ஒன்றியச் செயலாளர் டாக்டர் வே.செழியன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது முன்னாள் மாவட்ட கவுன்சிலர் நல்லம்மாள், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் பத்திரம் மனோகரன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.